தண்ணீர்ப் பஞ்சத்தை சமாளிப்பதற்குச் சொந்தமாகக் கூட உதகை நகராட்சி லாரிகள் எல்லாம் பெற்று தண்ணீர் சப்ளை செய்யக் கூடிய வகையில் ஏற்பாட்டைச் செய்யலாம். ஒன்பது திறந்தவெளி கிணறுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அவை எத்தனை லிட்டர் தண்ணீர் கெபாசிட்டி உள்ள கிணறுகளாக இருக்கும்? ஒரு நாளைக்கு 50 காலன் தண்ணீர் வீதம் 1,05,000 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 15,75,000 காலன் தண்ணீர் தேவைப்படுகிறது. இப்போது உதகையில் சீசன் காலமாக இருப்பதால் வெளியே இருந்து மக்கள் அதிக அளவில் வருவார்கள். ஆகவே, நீலகிரியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அங்கே வாழ்ந்து வரும் மக்கள் மற்றும் வெளியேயிருந்து வருகிற பல்லாயிரக்கணக்கான மக்கள், சுற்றுலாப் பயணிகள் பயன்பெறுகின்ற அளவிற்கு அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் என்ன திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்? ஒரு நாளைக்கு 50 காலன் தண்ணீர் ஒரு குடும்பத்திற்கு கொடுக்க என்ன நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பார்சன் பள்ளத்தாக்குத் திட்டத்தினுடைய இரண்டாவது திட்ட வேலைகள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன. இப்போது பெருமளவில் மக்கள் கூடுகிறதால் இப்படிப்பட்ட குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைப் போக்குவதற்கு நகராட்சி மூலமாகவும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும், நாம் எந்த அளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்த அளவிற்கு மேற்கொள்ளவிருக்கிறோம். தேவைப்பட்டால் லாரிகள் மூலமாக குடிதண்ணீரைக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யும்.

(ஆ) மதுரை பால் பண்ணையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தடுப்பது குறித்து

திரு. ஆர். சிவக்குமார்: தலைவர் அவர்களே, ''மதுரை சமயநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட மதுரை பால் பண்ணையில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் சுகாதாரக் கேடு ஏற்படுவதால், அப்பகுதி வாழ் மக்களின் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே. பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[டாக்டர் கா. காளிமுத்து] [1986 ஏப்ரல் 30

அறிக்கை.

மதுரையில், மதுரை-சிவகங்கை சாலைக்கு அருகில் சாத்த மங்கலத்தில் மதுரை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத் தின் கீழ் இந்த பால் பண்ணை அமைந்துள்ளது. இப் பால் பண்ணை, மாதம் ஒன்றுக்கு 45 லட்சம் லிட்டர் பால், 180 டன் வெண்ணெய், 9 டன் நெய், 240 டன் பால் பவுடர் தயாரிக் கிறது. அன்றாட உபயோகம் மற்றும் தொழிற்சாலை உப யோகத்திற்கு நாளொன்றுக்கு முறையே 20,000 லிட்டர் மற்றும் 3 லட்சம் லிட்டர் நீரைப் பயன்படுத்துகிறது. பால் பண்ணை வளாகத்தில் உள்ள சொந்தக் கிணற்றிலிருந்தும், வைகை ஆற்றுப் படுகையில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் இது நீரைப் பெறுகிறது. ஆற்றுப் படுகை நீர் தொழிற்சாலை உபயோகத் திற்கும், கிணற்று நீர் குளிரூட்ட மற்றும் கொதி கலனுக்கும் பயன்படுகிறது. பால் பண்ணையிலிருந்து நாளொன்றுக்கு கழிவு நீர் 20,000 லிட்டரும், தொழிற்சாலைக் கழிவு நீர் 3 லட்சம் லிட்டரும் வெளியிடப்படுகிறது. பால் பண்ணையில் காலி பாட்டில்களைக் கழுவுவதினாலும், பால் பதனிடும் இயந் திரங்களைக் கழுவுவதினாலும் இயந்திரங்களிலிருந்து ஏற்படும் கசிவுகளாலும், தொழிற்சாலைக் கழிவு நீர் உண்டா கிறது. தொழிற்சாலைக் கழிவு நீரில், எண்ணெய் மற்றும் கொழுப்புப் பொருள்களும், உயிர் இரசாயன உயிரகத் தேவையும் (பி.ஓ.டி), கரைந்துள்ள திடப் பொருள்கள், மிதக்கும் திடப் பொருள்களும் உள்ளன. சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் நிலத் திலோ அல்லது நீர்நிலைகளிலோ வெளி விடப்பட்டால், துர் நாற்றம் ஏற்படவும், நீர்நிலைகள் மற்றும் நிலத்தடி நீர் மாசு படவும் காரணமாகும்.

கழிவு நீர், நச்சுத் தடைத் தொட்டியில் சுத்திகரிக்கப்படு கிறது. தொழிற்சாலைக் கழிவு நீர் தொட்டியில் சேகரிக்கப் பட்டு, சிறிது நேரம் காற்று செலுத்தப்பட்டு பின்பு ஒரு வடி கால் மூலம் வைகை ஆற்றில் சேருகிறது. 10–4–1986 அன்று பால் பண்ணையைப் பார்வையிட்டபோது, போதுமான சுத்தி கரிப்பு நிலையத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை, மாநகராட்சியின் வடிகால் குழாய்களில் வெளியேற்ற இருப்பதாகவும் கூறப்பட் டது. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்படி, பால் பண்ணை, தனது சாக் கடைநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவு நீரை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெற வேண்டும். இதன்படி, பால் பண்ணை, வாரியத்தின் அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளது. விண்ணப்பம் வாரியத்தின் பரி சீலனையில் உள்ளது.

1986 ஏப்ரல் 30] [டாக்டர் எச். வி. ஹண்டே]

பால் பண்ணைக்கு அனுமதி வழங்கும்போது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப, கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியிட வேண்டுமென்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்படும்.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : தலைவர் அவர்களே, அறிக்கை அவையில் வைக்கப்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அவையில் நேற்றைய தினம் எடுத்துக் கொள்வதாக இருந்தது. ஆகவே நேற்றைய தினமே அவையில் அறிக்கை வைக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆ. சிவக்குமார் : தலைவர் அவர்களே, இந்தப் பால் பண்ணை ஆரம்பித்து பல ஆண்டுக் காலம் ஆகிறது. ஆனால், ''10-4-1986 அன்று பால் பண்ணையைப் பார்வையிட்ட போது, போதுமான சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க திட்டமிடப் பட்டுள்ளதாகவும், சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை, மாநக ராட்சியின் வடிகால் குழாய்களில் வெளியேற்ற இருப்பதாகவும் கூறப்பட்டது'' என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சுத்திகரிப்பு நிலையம் வெகுவிரைவில் அமைக்கப்படுமா? அதற்கு கால அளவு ஏதாவது நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? அதற் கான திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கை நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பால் பண்ணை 10-4-1986 அன்று பார்வையிடப்பட்டது என்ற அறிக் கையை, பார்த்துப் படித்துதான் மாண்புமிகு உறுப்பினர் சிவக் குமார் அவர்கள் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆகவே வெகுவிரைவில் எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்ய வில்லையென்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான மதிப்பீடு பற்றிய தகவல் என்னிடத்தில் கொடுக்கப்படவில்லை. ஆகவே அந்த விவரம் என்னிடத்தில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு ஆ. சிவக்குமார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை என் கையில் இருக்கிறது. அதை வைத்துத் தான் நான் கேள்வி கேட்கிறேன். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரி யத்தின் அனுமதியைப் பெற விண்ணப்பம் எப்போது அனுப்பப் பட்டது? அந்த அனுமதியைப் பெற அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா? ஏனென்றால் இந்தக் கழிவுநீர் செல்கிற தாசில்தார்

நகர், சதாசிவ நகர், வண்டியூர், சௌராஷ்டிராபுரம், இந்திரா நகர் போன்ற பகுதிகளில் மிகுந்த துர்நாற்றம் அடிப்பதால் அந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதனை சீர்படுத்தி, செம்மைப்படுத்தி செய்ய பாதாள சாக்கடை மூலமாக கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, கழிவு நீரைப் பொறுத்தவரையில், oil, grease, B.O.D., floating solid, dissolved solid, suspended solid என்று பல பொருள்கள் அதில் இருக்கின்றன. அவை தரையில்வெளியே வருகிற நேரத்தில் துர்நாற்றம் அடிக்கிறது. அதுமட்டுமல்லாமல் அதனால் பல தொல்லைகளும் ஏற்படும். ஆகவே அதற்காக ஒரு ‘செப்டிக் டாங்க்’ ஏற்படுத்தி அதற்குள் அந்தக் கழிவுநீரை விட வேண்டும்.

(முற்பகல் 10–00)

சில நாட்களுக்குப் பிறகு, அந்த B. O. D. Contents தெரிந்ததற்குப் பிறகுதான் வெளியேற்ற வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்—

Uner Section 26 of the Water Prevention and Control of Pollution Act, 1974, the Unit has to obtain the consent of the Board to discharge the effluents.

அவர்களுக்கு அந்த கன்செண்ட், அந்த அனுமதி மறுக்கப்படக்கூடிய அளவிற்கு, உத்தரவு போடக்கூடிய அளவிற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது கணக்குக் குழு

திரு. என் .எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் மூன்று அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:—

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் அறிக்கைகளில் வனம்-மீனளத் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.